DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1698/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | இளையராஜா | த-பெ | தனுஸ்கோடி |
| ஊர்: | : | மாத்தூர் | | |
| வயது: | : | 40/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.03.2026**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் மாத்தூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர்எதிரியை தெரியும். வழக்கு சம்மந்தமாக ஆஜர் எதிரியுடன் தற்போது சமரசம் செய்து கொண்டு சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி **சமாதான மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.2**. சம்பவ சமயத்தில் எதிரி மீது இருந்த பகை உணர்வு காரணமாக புகார் அளித்து விட்டேன். மற்றபடி எதிரியானவர் எவ்வித குற்ற சம்பவமும் ஈடுபடவில்லை. 23.08.2019 அன்று காலை 6.40 மணிக்கு வீட்டின் அருகில் இருந்த பள்ளத்தில் தவறுதலாக கீழ் விழுந்து விட்டேன். எதிரி அங்கு இருந்ததால் அவர் தான் தாக்கியிருப்பார் என்று புகார் அளித்துவிட்டேன் மற்றபடி வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 23.08.2019 காலை 6.40 மணிக்கு நேசமணி என்பவருடன் மாத்தூர் சாலை ரேசன் கடை முன்பு வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரியானவர் தன்னை வழி மறித்து முன் விரோதத்தை மனதில் வைத்து கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி கையில் வைத்திருந்த பாட்டிலால் தனது தலையில் ஓங்கி அடித்தாகவும், அருகில் இருந்தவர்கள் இந்த சம்பவததை

விலக்கி வைத்தைதாகவும், பின்னர் காரைக்குடி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் சேர்ந்த போது மேற்படி விவரங்களை எதிரி மீது நடவடிக்கை எடும்படி புகார் அளித்து விட்டு தற்போது வழக்கு விசாரணையில் எதிரியானவர் தனக்கு தெரிந்தவர் என்பதால் அவருடன் சமரசம் செய்து கொண்டு உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.09 17:30:34 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1698/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நேசமணி | த-பெ | ஆறுமுகம் |
| ஊர்: | : | ஊரிவயல் | | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம். | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஊரிவயலில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ஆஜர் எதிரியுடன் சமரசம் செய்து கொண்ட விவரம் எனக்கு தெரியும். போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன். சம்பவ சமயத்தில் அ.சா.1 ஐ ஆஜர் எதிரியானவர் எந்த பொருளை கொண்டும் தாக்கவில்லை. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 23.08.2019 காலை 6.40 மணிக்கு அ.சா.1 டன் மாத்துார் சாலை ரேசன் கடை முன்பு வந்து கொண்டிருந்த போது ஆஜர் எதிரியானவர் அ.சா.1 ஐ வழி மறித்து முன் விரோதத்தை மனதில் வைத்து கீழ் நோக்கிய வார்த்தைகளால் திட்டி கையில் வைத்திருந்த பாட்டிலால் அவரது தலையில் ஓங்கி அடித்தாகவும், அருகில் இருந்தவர்களுடன் தானும் சேர்ந்து இந்த சம்பவததை விலக்கி வைத்ததாகவும், பின்னர் காரைக்குடி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் சேர்ந்த போது அ.சா.1 மேற்படி விவரங்களை சொல்லி எதிரி மீது நடவடிக்கை எடுக்கும்படி புகார் அளித்த விவரம் தனக்கு தெரியும் என்றும் தான் நேரடியாக பார்த்த சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.09 17:30:41 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1698/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அன்பரசன் | த-பெ | முத்துராமலிங்கம் |
| ஊர்: | : | இலுப்பைக்குடி | | |
| வயது: | : | 56/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம். | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.03.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் இலுப்பைக்குடியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. ஒரு நாள் நான் காவல் நிலையம் சென்றேன். போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க கையொப்பம் செய்தேன். மற்றபடி எனக்கு வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் 23.08.2019 மாலை 5.00 மணிக்கு மாத்தூர் ரேசன் கடை முன்பு நின்று கொண்டிருந்த போது சாக்கோட்டை போலீசார் 237/2019 என்ற வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு தற்போது உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.09 17:30:46 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1698/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சீனிராஜ் | த-பெ | குலசேகரன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 38/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர். SBCID. | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து SBCID ல் சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். 23.08.2019 அன்று சாக்கோட்டை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது சார்பு ஆய்வாளர் சுகன்யா என்பவர் நிலையத்தில் இருந்தார். காரைக்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று 16.00 மணிக்கு அங்கு சென்று உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த இளையராஜா என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலைய குற்ற எண். 237/2019 இதச பிரிவுகள்341, 294(b), 324 ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்தார். **புகார் அ.சா.ஆ.3. முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4**. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஏகாம்பரம் மற்றும் அன்பரசன் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்துள்ளார். பின்னர் இந்த வழக்கின் எதிரியை தேடி சென்ற நிலையில் எதிரியானவர் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் முன் ஜாமின் பெற்று விட்ட காரணத்தால் அவரை கைது செய்ய இயலவில்லை. இந்த வழக்கில் காயம் பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் அருள் குமரன் என்பவரை விசாரணை செய்து அவரிடம் இருந்து காய சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **விபத்து பதிவேடுடன் கூடிய காய சான்றிதழ் அ.சா.ஆ.5**. பின்னர் வழக்கின் சட்ட பிரிவினை மாற்றம் செய்து சட்ட பிரிவு மாற்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார். சட்ட பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.6. பின்னர் வழக்கு கோப்பை எனது வசம் ஒப்படைத்தார். விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் மேற்படி

சாட்சிகளை விசாரணை செய்த போது அவரிடம் சொன்ன விவரங்களை என்னிடம் சொன்னதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. வழக்கின் விசாரலணை நிறைவு செய்து 24.10.2019 அன்று மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் எதிரி மீது கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.09 17:30:51 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.